1969 மார்ச் 31]

தலைமையாசிரியர்களுக்குத் தனியாகப் படி கொடுத்துவந்திருக்கிறார்கள். அது பிற பள்ளிகளில் கிடையாது. அந்தப் படியை 1961ம் ஆண்டில் எடுத்துவிட்டிருக்கிறார்கள். மறுபடியும் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு பி. வேலுசாமி: இந்தத் தொடக்கப் பள்ளியிலேயிருக்கும் மாணவர்கள் முழுதுமாக சாதாரண பிஞ்சு உள்ளங்களோடு இருக்கிறவர்களாகையால் தாய்க்குலத்தைச் சேர்ந்தவர்களைக் கொண்டு கல்வி போதிக்கும் முறையை அரசு கொண்டுவருமா? அப்படிப் போதிப்பதன் மூலம் அந்த இளம் பிஞ்சு உள்ளங்களின் வளர்ச்சி சரியாக இருக்கும் என்று சர்க்கார் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆசிரியர் பயிற்சிக்குத் தாய்குலத்திலிருந்து ஏராளமானவர்கள் எடுக்கப்படுகிறார்கள். இன்றைக்கும் ஏராளமானவர்கள் அவர்களில் பணியாற்றுகிறார்கள். அவர்களிலே சிறந்த முறையில் பணியாற்றுகிறவர்களும் உண்டு. மோசமானவர்களும் இருக்கலாம். ஆகவே, தாய்க்குலம்தான் அதற்குத் தகுந்தவர்கள் என்று நாம் சொல்லிவிட்டால் ஆண்குலம் எதிர்க்கும் என்று நம்புகிறேன்.

Thiru K. VINAYAKAM: Sir, whereas elementary school teachers who serve as headmasters are expected to do some extra work in their capacity as headmasters, is the Government aware of the fact that private managements are giving incentives from their funds to the teachers employed as headmasters and, if so will the Government fall in line with this policy of giving a 'headmaster allowance' to such of those teachers who work in that capacity?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: என்னிடத்தில் இருக்கக்கூடிய தகவலின்படி தனியார் பள்ளிகளிலே பணியாற்றக்கூடிய தலைமையாசிரியர்களுக்கு இந்தப் படி கொடுக்காத காரணத்தாலே பஞ்சாயத்து யூனியன்களின் கீழ் வேலை பார்த்து வருகின்ற தலைமையாசிரியர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்று முன்பிருந்த அரசாங்கம் முடிவுக்கு வந்திருக்கிறது. ஆனால், என்னுடைய கருத்து அவர்களுக்குக் கொடுக்காததால் இவர்களுக்கும் கொடுக்கக்கூடாது என்பது அல்ல. இவர்களுக்குக் கொடுப்பது நியாயம் என்று கருதுகிறேன். அதைப் பற்றி அரசாங்கம் இப்பொழுது பரிசீலித்து வருகிறது.

சிறு தொழில்கள்.

*540 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன்:** மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களை பலப்படுத்தவும், அவைகளுக்கு ஊக்கமளிக்கவும் சர்க்காரின் நடவடிக்கை என்ன?

(இ) இவைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில், சிறு தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யும் பண்டங்களை இதர பெரிய தொழில்களின் மூலம் உற்பத்தி செய்வதை தடை செய்ய திட்டம் ஏதேனும் இருக்கின்றதா?

(உ) அப்படி எந்தெந்த பண்டங்கள் சிறு தொழில்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன, மேலும் என்னென்ன பொருள்களை ஒதுக்க உத்தேசம், விவரம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விவர அறிக்கை [a] ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

[a] 832—835-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.